தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

## பிராமணப்பட்டியில் கறவை மாடுகள் வழங்கல்

சிவகங்கை மாவட்டம் திருக்கோஷ்டியூர் அருகே பிராமணப்பட்டி கிராமத்தில் கூட்டுறவு கடன் சங்கம் மூலம் ரூ.3 லட்சம் மதிப்பீட்டில் கறவை மாடுகள் வழங்கும் விழா புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கூட்டுறவு சங்கத் தலைவர் ஜெ.சிவசுப்பிரமணியம் தலைமை வகித்து கறவை மாடுகளை வழங்கினார். திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் பத்மநாதன், பிராமணப்பட்டி ஊராட்சிமன்றத் தலைவர் மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக துணைத் தலைவர் சேதுராமசாமி அனைவரையும் வரவேற்றார். கால்நடை, துணை மருத்துவ அலுவலர்கள் கோகிலவாணி, செல்வராஜ் ஆகியோர் பயனாளிகளுக்கு மாட்டின் வளர்ப்பு முறை மற்றும் நோய் அறிதல் குறித்து பேசினர். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு இயக்குநர்கள் தமிழரசன், பாண்டியன், நடராஜன், சுமதி, கணேசன், மற்றும் கள மேற்பார்வையாளர் போஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி முடிவில் கூட்டுறவுச் செயலர் பெரியசாமி நன்றி கூறினார்.

## கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம் தொடக்கம்

புதுச்சேரியில் கால்நடைத் துறை சார்பில் கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் முகாம் புதன்கிழமை தொடங்கியது. மத்திய அரசின் வழிகாட்டுதல்படி புதுவையில் உள்ள அனைத்து கொம்யூன் பகுதிகளிலும் கால்நடைகளுக்கு வரும் 26-ம் தேதி வரை தேசிய கோமாரி நோய் தடுப்பூசி முகாம்கள் நடைபெறுகின்றன. வரும் 5-ம் தேதி வரை அரியாங்குப்பம், சிவராந்தகம் கால்நடை மருந்தகத்திலும், 8-ம் தேதி முதல் 12-ம் தேதி வரை வில்லியனூர் கால்நடை மருந்தகத்திலும், 8-ம் தேதி முதல் 11-ம் தேதி வரை மதகடிப்பட்டு கால்நடை மருந்தகத்திலும், 15-ம் தேதி முதல் 19-ம் தேதி வரை கரியமாணிக்கம், திருக்கனூர் கால்நடை மருந்தகத்திலும், 22-ம் தேதி முதல் 26-ம் தேதி வரை தட்டாஞ்சாவடி, பாகூர் மருந்தகத்திலும், 23-ம் தேதி முதல் 25-ம் தேதி வரை புதுவை கால்நடை மருந்தகத்திலும் தடுப்பூசி முகாம் நடக்கிறது.

இம்முகாம்களில் கால்நடை மருத்துவர், உதவியாளர்கள் நாள்தோறும் காலை 6 மணி முதல் 10 மணி வரை கோமாரி நோய் தடுப்பூசி போட உள்ளனர். எனவே கால்நடை உரிமையாளர்கள் தங்கள் கால்நடைகளை கோமாரி நோயில் இருந்து காத்துக் கொள்ளும் வகையில் கால்நடைகளை அழைத்து வர வேண்டும் என கால்நடை துறை இயக்குநர் டாக்டர் பத்மநாபன் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகள் பங்களிப்புடன் பசுமை மின் உற்பத்தி

கர்நாடகத்தில் விவசாயிகள் பங்களிப்புடன் பசுமை மின் உற்பத்தி செய்யப்படும் என்று, அந்த மாநில மின்சாரத் துறை அமைச்சர் டி.கே.சிவக்குமார் தெரிவித்தார்.

இதுகுறித்து பெங்களூருவில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

பஞ்சாப் மாநிலத்தில் உள்ளது போல கர்நாடகத்திலும் பசுமை மின் உற்பத்தித் திட்டம் தொடங்க வேண்டும் என்று மரியாதை நிமித்தமாக என்னைச் சந்தித்த கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங் கேட்டுக் கொண்டார். அவரது கோரிக்கையை நிறைவேற்ற மாநில அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். பஞ்சாப் மாநிலத்தில் விவசாயிகளின் ஒத்துழைப்புடன் சூரிய ஒளியைப் பயன்படுத்தி மின்சார உற்பத்தி செய்யப்படுகிறது. இதேபோல, கர்நாடகத்திலும் விவசாயிகளின் பங்களிப்புடன் பசுமை மின் உற்பத்தி செய்யப்படும். விவசாயிகள் தங்களது நிலங்களில் சூரிய ஒளியைக் கொண்டு உற்பத்தி செய்யும் மின்சாரத்தை உரிய விலை கொடுத்து அரசு வாங்கிக் கொள்ளும். பசுமை மின் உற்பத்தித் தொடர்பாக விரைவில் அமைச்சர்களுடன் ஆலோசிக்கப்படும். மேலும், பாஜகவினர் அர்க்காவதி நில விடுப்பு விவகாரத்தை அரசியலாக்கி வருகின்றனர்.

அரசியல் காரணங்களுக்காக ஆளுநர் மாளிகையை பாஜக பயன்படுத்திக் கொள்வதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. பாஜகவினர் தில்லிக்குச் சென்று மாநிலத்தின் வளர்ச்சிக்குத் தேவையான நிதியைப் பெற்றுத் தருவதற்கு முயற்சிக்க வேண்டும். தில்லிக்குச் சென்றுள்ள முதல்வர் சித்தராமையா, காங்கிரஸ் தலைவர் பரமேஸ்வர் ஆகியோர் கட்சியின் மேலிடத் தலைவர்களைச் சந்தித்து, கர்நாடக அமைச்சரவை விரிவாக்கம், வாரிய, கழங்கங்களுக்குத் தலைவர்கள் நியமிப்பது தொடர்பாக பேச்சு நடத்த உள்ளனர். இதுகுறித்து எந்தக் கருத்தையும் தற்போது என்னால் கூற முடியாது என்றார் அவர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

**மேட்டூர் அணை நீர்வரத்து 13,037 கனஅடியாக உயர்வு**

மேட்டூர்: கபினி உபரி நீர் வரத்து காரணமாக, மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 13,037 கனஅடியாக அதிகரித்தது. மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று முன்தினம் வினாடிக்கு, 6,125 கனஅடியாக சரிந்த நிலையில், பாசனத்துக்கு தொடர்ச்சியாக நீர்திறந்ததால், கடந்த, 17ம் தேதி, 113 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று, 103.04 அடியாக சரிந்தது. நீர்பிடிப்பு பகுதியில் பெய்த கனமழையால், கடந்த, 1ம் தேதி கர்நாடாவின் கபினி நீர்வரத்து அதிகரித்தது. கபினியில் இருந்து வினாடிக்கு, 25,000 கனஅடி உபரி நீர் மேட்டூர் அணைக்கு திறக்கப்பட்டது. இந்த நீர் அணைக்கு வரத்துவங்கி உள்ளதால், நேற்று மேட்டூர் அணை நீர்வரத்து வினாடிக்கு, 13,037 கனஅடியாக அதிகரித்தது. வினாடிக்கு, 17,000 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை டெல்டா நீர்திறப்பு நேற்று காலை, 6 மணி முதல், வினாடிக்கு, 18,000 கனஅடியாக அதிகரித்தது. நீர்வரத்தை விட, வெளியேற்றம் அதிகமாக இருப்பதால், நீர்மட்டம் படிப்படியாக சரிந்து வருகிறது. இந்நிலையில், நீர்வரத்து குறைந்ததால், நேற்று கபினி உபரி நீர்திறப்பு, 19,000 கனஅடியாக குறைக்கப்பட்டது.

**எதிர்பார்ப்பு! :மாட்டுச்சந்தைகளில் கோமாரி தடுப்பூசி முகாம்... : வெளி மாநில மாடுகளால் தொற்று பரவ வாய்ப்பு**

நாமக்கல்: நாமக்கல் மாவட்டத்தில், கோமாரி தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டு வரும் நிலையில், இரண்டு மாட்டுச்சந்தைகளில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக,

வெளிமாநில மற்றும் மாவட்ட மாடுகளுக்கு, கோமாரி தடுப்பூசி போட வேண்டும் என, கால்நடை வளர்ப்போர் எதிர்பார்கின்றனர். பால் உற்பத்தியை பெருக்க, கால்நடைகளுக்கு தீவனம், செயற்கை கருவூட்டல், காப்பீடு வசதி, கடன் வசதி, தாதுஉப்பு மற்றும் பசும்புல் வழங்கல், ஆண்டு தோறும் ஊக்கத்தொகை ஆகிய வசதிகள் பால்வளத் துறை வழங்குகிறது. கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், கால்நடை வளர்ப்புக்கு தேவையான ஆலோசனை, நோய் தடுப்பு நடவடிக்கை உள்ளிட்டவை வழங்கப்படுகிறது. இருந்தும், கடந்தாண்டு, கால்நடைகளுக்கு கோமாரி நோய் பாதிப்பு ஏற்பட்டு, மாநிலம் முழுதும், ஆயிரக்கணக்கான மாடுகள் பலியாகி, பெரும் இழப்பை ஏற்படுத்தின. இந்நிலையில், நடப்பாண்டுக்கான கோமாரி தடுப்பூசி முகாம், யூனியன் வாரியாக கால்நடைத்துறை மற்றும் அந்தந்த பஞ்சாயத்து நிர்வாகம் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இருந்தும், வெளி மாநிலத்தில் இருந்து, மாட்டுச்சந்தைக்கு வரும் மாடுகளால், கோமாரி தொற்று பாதிப்பு ஏற்பட்டு, இழப்பு ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. நாமக்கல் மாவட்டத்தில், பள்ளிபாளையம், குமாரபாளையம், ஜேடர்பாளையம், ப.வேலூர், வெங்கரை, மோகனூர் உள்ளிட்ட பகுதிகள், கறவை மாடு வளர்ப்பு அதிகமாக உள்ளது. திருச்செங்கோடு அடுத்த மோர்பாளையம் மற்றும் சேந்தமங்கலம் அடுத்த புதன்சந்தை ஆகிய, இரண்டு இடங்களில் வாராந்திர மாட்டு சந்தை செயல்பட்டு வருகிறது. அங்கு, சேலம், கள்ளக்குறிச்சி, தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஆத்தூர், பர்கூர் உள்ளிட்ட வெளிமாவட்டம் மற்றும் ஆந்திரா, கர்நாடகா மாநில மாடுகள் விற்பனைக்கு வருகிறது. மாவட்டத்தில், கடந்த, 1ம் தேதி முதல், வரும், 21ம் தேதி வாரியாக, ஒவ்வொரு பஞ்சாயத்து வாரியாக, மூன்று லட்சத்து, 48 ஆயிரம் கால்நடைக்கு, தடுப்பூசி போடுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, மாவட்டம் முழுவதும், 97 கால்நடை மருத்துவர்கள் குழு நியமிக்கப்பட்டு, தொடர்ந்து, 21 நாட்கள் கோமாரி தடுப்பூசி போடப்படுகிறது. இருந்தும், மாட்டுச்சந்தைக்கு விற்பனைக்கு வரும், வெளிமாவட்ட மற்றும் மாநில மாடுகளால், தொற்று பரவி கோமாரி நோய் தாக்குதல் ஏற்படுமா என்ற அச்சத்தில், கால்நடை வளர்ப்போர் உள்ளனர். " இந்நிலையில், வரும் வாரங்களில், மாட்டுச்சந்தையில் கோமாரி தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்கப்படும்' என, கால்நடை பராமரிப்பு இணை இயக்குனர் சக்திவேல் தெரிவித்தார்.

## ஒகேனக்கல் காவிரியில் நீர் வரத்து அதிகரிப்பு

ஒகேனக்கல்: கர்நாடகா அணைகளில் இருந்து, தமிழகத்துக்கு காவிரியில் தண்ணீர் திறந்து விடப்பட்ட உபரி நீர், நேற்று, தமிழக எல்லையான ஒகேனக்கல்லை வந்ததடைந்தது. கர்நாடகா மாநிலத்தில், காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில், கடந்த சில தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், கபினி, கே.ஆர்.எஸ்., உள்ளிட்ட அணைகளுக்கு, நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதையடுத்து, இவ்வணை களின் பாதுகாப்பு கருதி கர்நாடகா அரசு கடந்த, இரண்டு தினங்களுக்கு முன், தமிழகத்துக்கு காவிரியில் வினாடிக்கு, 25 ஆயிரம் கனஅடி நீர் திறந்து விட்டது. இந்நீர், நேற்று பிற்பகல் தமிழக எல்லையான பிலி குண்டலுவுக்கு வந்து அடைந்தது. இதனால், ஒகேனக்கல் குளிக்கும் அருவிக்கு செல்லும் நடைபாதைக்கு மேல், தண்ணீர் சென்றதுடன், ஒகேனக்கல் குளிக்கும் அருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும், வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளதால், டெல்டா மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## விதை பரிசோதனை அறிக்கை வீடுதேடி வரும்

ஊட்டி : "விதைகளின் முளைப்பு திறன் குறித்த விதை பரிசோதனை அறிக்கை வீடு தேடி வரும்' என, அறிவிக்கப்பட்டுள்ளது. ஊட்டி விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: நீலகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், தங்களிடம் உள்ள விதையின் முளைப்பு திறன் குறித்து அறிந்து கொள்ள, நேரடியாக விதை பரிசோதனை நிலையத்தில் விதைகளை பரிசோதித்து கொள்ளலாம். இதற்கு, 30 ரூபாய் மட்டும் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. விதைகள், குறுகிய காலத்திற்குள் பரிசோதிக்கப்பட்டு, அதன் முடிவுகள், விவசாயிகளின் வீட்டு முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும். காரட், பீட்ரூட், பட்டாணி, பீன்ஸ், நூல்கோல், டர்னிப், முட்டை கோஸ், காலி பிளவர், முள்ளங்கி போன்ற மலை தோட்ட காய்கறி பயிர்களின் விதைகளின் முளைப்புத்

திறனை உறுதி செய்து, பயனடைய விவசாயிகள் முன்வர வேண்டும். இவ்வாறு, அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டும் பணி தீவிரம்

திருச்சி: ஸ்ரீரங்கத்திலிருந்து, சமயபுரம் டோல்கேட்டுக்கு செல்வதற்கான கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, புதிய பாலம் கட்டும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. ஸ்ரீரங்கம், திருவானைகாவல் பகுதியிலிருந்து, சமயபுரம் டோல்கேட் செல்லும் வழியில், கொள்ளிடம் ஆறு அமைந்துள்ளது. இந்த ஆற்றின் குறுக்கே உள்ள ஆங்கிலேயர் காலத்து இரும்பு பாலத்தின் வழியாக, வாகனங்கள் சென்று வந்தன. பாலம் வலுவிழந்ததை அடுத்து, டூவீலர் மற்றும் கார்கள் மட்டும் பாலத்தில் செல்ல அனுமதிக்கப்படுகிறது. பஸ் மற்றும் கனரக வாகனங்கள், கல்லணை பிரதான சாலை வழியாக, நான்கு வழிச்சாலைக்கு சென்று, சமயபுரம் டோல்கேட்டுக்கு செல்கின்றன. இதையடுத்து, ஸ்ரீரங்கம், திருவானைகாவல் - சமயபுரம் டோல்கேட் இடையே கொள்ளிடம் ஆற்றில் புதிய உயர்மட்ட பாலம் அமைக்க திட்டமிடப்பட்டது. கடந்த, 2013ம் ஆண்டு அக்டேபர் மாதம், 75.47 கோடி ரூபாய் மதிப்பில் புதிய பாலம் கட்டுமான பணிகள் துவங்கின. மதுரையை சேர்ந்த மூக்கன் அம்பலம் அண்ட் கோ கட்டுமான நிறுவனத்துக்கு பணி வழங்கப்பட்டது. முதல்கட்டமாக, ஆற்றினுள் பில்லர் அமைத்து, ஸ்ரீரங்கம் மற்றும் சமயபுரம் டோல்கேட் பகுதி கரைகளில் மண் அரிப்பை தடுக்க கான்கிரீட் தடுப்பு அமைத்துள்ளனர். ஓராண்டு நிறைவடையும் நிலையில், பாலத்திற்காக பில்லர் பணிகள் முழுமையாக முடித்துள்ளனர். பில்லரின் மீது, பீம்கள் வைப்பதற்கு கான்கிரீட் போடுவதற்காக, கம்பி கட்டும் பணிகளை துவக்கி உள்ளனர். 2015 மார்ச் மாத்தில், பாலம் பயன்பாட்டிற்கு வரும், என கட்டிடப்பணி மேற்கொள்ளும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வணிக வளாகத்தில் 27 மெட்ரிக் டன் வெங்காயம் ஏலம்

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், செட்டிக்குளத்தில் உள்ள வெங்காய வணிக வளாகத்தில் நடந்த திறந்தமுறை ஏலத்தில், 27 மெட்ரிக் டன் சின்ன வெங்காயம், இரண்டு லட்சத்துக்கு விற்பனையானது. செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் நடைபெற்ற திறந்தமுறை ஏலத்தில் இருர்,

ஆலத்தூர், லாடபுரம், நக்கசேலம், சத்திரமனை, செட்டிக்குளம், நாட்டார்மங்கலம், பெருமத்தூர், எளம்பலூர், மணியாங்குறிச்சி உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த, 67 விவசாயிகள் சின்ன வெங்காயத்தை ஏலத்திற்கு கொண்டு வந்தனர். செட்டிகுளம் உள்ளிட்ட பல்வேறு பகுதியை சேர்ந்த, 13 வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டு, 400 மூட்டை (27,203 கிலோ) சின்ன வெங்காயத்தை ஏலத்தில் எடுத்தனர். இதில், பழைய பட்டறை வெங்காயம் அதிகபட்சமாக, 14.50 ரூபாய்க்கும், புதிய வெங்காயம் கிலோ அதிகபட்சமாக, 20 ரூபாய்க்கும் விற்பனையானது.

## 1.25 லட்சம் கால்நடைகளுக்கு நோய் தடுப்பூசி போட இலக்கு

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்டத்தில், கால்நடைகளை நோய் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதற்காக, கால்நடை பராமரிப்புத்துறை மூலம், அனைத்து கால்நடைகளுக்கும், 13 சுற்று தடுப்பூசி போட வேண்டும். பெரம்பலூர் மாவட்டத்தில், ஆறு சுற்று தடுப்பூசி முகாம் நிறைவடைந்துள்ளது. 7வது முகாமில், ஒரு லட்சத்து, 25 ஆயிரத்து, 600 கால்நடைகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயக்கப்பட்டு, செப்டம்பர், 21ம் தேதி வரை, 121 பஞ்சாயத்துகள் மற்றும் 4 பேரூராட்சிகளை சேர்ந்த அனைத்து கிராமங்களிலும் தடுப்பூசி முகாம் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. செங்குணம், பொம்மனபாடி, அனுக்கூர், அ.மேட்டூர், கிருஷ்ணாபுரம், நக்கசேலம், வேப்பூர் மற்றும் பெரியவெண்மணி ஆகிய கிராமங்களில் நடந்த முகாமில், 5,700 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. செப்டம்பர், 3ம் தேதி வேப்பந்தட்டை யூனியனுக்குட்பட்ட வெண்பாவூர், தழுதாழை, பிரம்மதேசம், ஆலத்தூர் யூனியனுக்குட்பட்ட புதுஅம்மாபாளையம், ஈச்சம்பட்டி, இலந்தங்குழி, சீராநத்தம், வேப்பூர் யூனியனுக்குட்பட்ட ஒகளூர், ஓலைப்பாடி, சின்னவெண்மணி, கொத்தவாசல், பெரம்பலூர் யூனியனுக்குட்பட்ட அருமடல், குரும்பலூர், குரும்பலூர் காலனி, சத்திரமனை உள்ளிட்ட பகுதிகளில் கால்நடை மருத்துவ முகாம் நடந்தது.

## வேளாண்மை அலுவலர்களுக்கு நிரந்தர பயண திட்டம் அறிமுகம்

திண்டுக்கல் : நிரந்தர பயண திட்டத்தின் கீழ் உதவி வேளாண்மை அலுவலர்கள் அனைவரும் ஒவ்வொரு கிராமத்திலும் ஆண்டிற்கு 26 முறை நேரில் சென்று களப்பணியாற்ற வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. வேளாண்மையை முன்னிலைப்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்களை அமல்படுத்துவது தொடர்பான ஆலோசனை கூட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இதில் முதல் கட்டமாக உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு நிரந்தர பயண திட்டம் வரையறுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வேளாண்மை அலுவலர்களும் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வட்டாரங்களில் உள்ள 8 கிராமங்களை தத்தெடுத்து கொள்ள வேண்டும். வாரந்தோறும் திங்களில் இருந்து வியாழன் வரை ஒவ்வொரு கிராமங்களுக்கும் நேரில் சென்று விவசாய குழுக்களை சந்தித்து அவர்களின் பிரச்னைகள் குறித்து விவாதிக்க வேண்டும். சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களை பார்வையிட்டு நோய் தாக்குதல் உள்ளதா என ஆய்வு நடத்த வேண்டும். ஒவ்வொரு நாள் மாலையில் விவசாயிகளை ஒரே இடத்தில் அமர வைத்து வயல்வெளி பிரச்னைகளுக்கான தீர்வுகளையும், முன்னேற்றத் திற்கான வாய்ப்புகளையும் தெளிவுபடுத்த வேண்டும். தமிழகத்தில் 385 வட்டாரங்கள் உள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 6 உதவி வேளாண்மை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். வட்டாரத்தில் உள்ள 8 கிராமங்களை இரண்டாக பிரித்து சுழற்சி அடிப்படையில் தொடர்ந்து களப்பணியாற்றவேண்டும். இதன் மூலம் ஆண்டிற்கு 26 முறை கிராமசந்திப்புகளை உதவி வேளாண்மை அலுவலர் நிறைவு செய்திருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

## வீடு வீடாக சென்று தடுப்பூசி போடுவது தீவிரம்! சினை மாடுகளுக்கு போடலாமா?

கம்பம் : வீடுவீடாக கால்நடைகளுக்கு காணை நோய் தடுப்பூசி போடுவதில் கால்நடை பராமரிப்புத் துறையினர் தீவிரம் காட்டி வருகின்றனர். சினை பிடித்த மாடுகளுக்கு தடுப்பூசி போட்டால், பிரசவத்தில் பிரச்னை ஏற்படும் என்று விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர். அக்டோபர், நவம்பர் மாதங்களில்

குறிப்பிட்ட ஒரு வைரஸ் காற்றில் பரவுவதால், மாடுகளுக்கு காணை நோய் ஏற்படுகிறது. கால் மற்றும் வாயில் புண் ஏற்படும், இந்த நோய் தாக்கினால், மாடு சாகாது. பால் குறையும். எனவே ஆண்டிற்கு இரண்டு முறை காணைநோய் தடுப்பூசி போடும் முகாம் கால்நடை பராமரிப்புத் துறையால் நடத்தப்படுகிறது. தற்போது தேனி மாவட்டத்தில் செப்டம்பர் 1ம் தேதி 21ம் தேதி வரை அனைத்து மாடுகளுக்கும் தடுப்பூசி போடும் பணிகள் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் காலை காமயகவுண்டன்பட்டியில் உதவி இயக்குநர் ஜெகதீசன், கால்நடை டாக்டர் காமேஷ் ஆகியோர் கொண்ட குழுவினர், வீடு வீடாகச் சென்று மாடுகளுக்கு தடுப்பூசி போடும் பணியை மேற்கொண்டு வருகின்றனர். அச்சம்: பலர் மாடுகளுக்கு தடுப்பூசி போடுவதற்கு தயக்கம் காட்டி வருகின்றனர். தடுப்பூசி போட்டால் பால் குறையும் என்றும், சினையாக உள்ள மாடுகளுக்கு பிரச்னை ஏற்படும் என்றும் பயப்படுகின்றனர். ஆனால் அது உண்மையல்ல. சினை பிடித்துள்ள மாடுகளுக்கும் தடுப்பூசி போடலாம். பால் குறையாது. ஊசி போட்டவுடன் நன்றாக தேய்த்து விட்டால் ஒன்றும் ஆகாது. எனவே தடுப்பூசி போட விவசாயிகள் முன்வர வேண்டும் என்றும் உதவி இயக்குநர் ஜெகதீசன் கூறியுள்ளார். 6 மாதத்தில் இருந்து தடுப்பூசி போடலாம். மாடுகள் வைத்திருப்பவர் கள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

**<u>தொழில்நுட்பம் கடைபிடித்தால் நெற்பயிரில் 30% அதிக மகசூல் வலங்கைமான் வேளாண் உதவி இயக்குனர் தகவல்</u>**

வலங்கைமான், : நெற்பயிருக்கு பரிந்துரைக்கப்படும் தொழில்நுட்பங் கள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை களை பின்பற்றினால் திருந்திய நெல்

சாகுபடி முறையில் 30 சதவீதம் வரை கூடுதல் மகசூல் பெறலாம். வலங்கைமான் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தேவேந்திரன் தெரிவித்துள்ளதாவது: திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் வட்டார விவசாயிகள் சம்பா பருவத்தில் அதிக மகசூல் பெறவும், உற்பத்தி திறனை உயர்த்த சம்பா பருவத்திற்கு ஏற்ற சிஆர்1009, பிபிடி 5204, ஏடிடி 46, சுவர்ணா சப் 1, எம்டியு 7029, ஏடிடி 38, கோ 50 திருச்சி-3 ஆகிய ரகங்கள் பயிர் செய்ய சிறந்தது. இந்த ரகங்களில் ஒன்றை திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிர் செய்ய வேண்டும். குறைந்த விதை பயன்பாடு, இளம் நாற்றுகளை நடவு செய்தல், அதிக இடைவெளியில் சதுர முறையில் நடவு செய்தல், களைக்கருவி பயன்பாடு, நீர் மறைய நீர் பாய்ச்சுதல் ஆகியவை திருந்திய நெல் சாகுபடியின் சிறப்பு அம்சங்களாகும். ஏக்கருக்கு ஒரு செண்ட் நாற்றங்கால் போதுமானது. நோய்களை கட்டுப்படுத்த ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் புளூரோசென்ஸ் மற்றும் நுண்ணுயிர் உரங்களான அசோஸ் பைரில்லம் ஒரு பாக்கெட், பாஸ்போ பாக்டீரியா 1 பாக்கெட், கலந்து விதை நேர்த்தி செய்து முளைப்பு கட்டிய பின்பு விதைப்பு செய்ய வேண்டும். ஒரு மீட்டர் அக லமும், 5 மீட்டர் நீளமும் பரப்பு கொண்ட 8 மேடை பாத்திகள் அமைத்து விதைகளை தூவி நாற்றங்கால் மீது வைக்கோல் பரப்பி பூவாளி மூலம் 3 நாட்களுக்கு தண்ணீர் தெளிக்க வேண்டும். பின்னர் வைக்கோலை நீக்கிவிட்டு சாதாரண முறையில் பாசனம் செய்ய வேண்டும். நன்கு சமப்படுத்தப்பட்ட வயலில் 14 நாட்கள் வயதுடைய இளம் நாற்று களை முக்கால் அடிக்கு முக்கால் அடி என்று நடவு செய்ய வேண்டும். 10வது நாள் முதல் 10 நாட்கள் இடைவெளியில் கோனோ களைக்கருவி கொண்டு களைகளை நீக்கம் செய்ய வேண்டும். கருவிக்கு அகப்படாத களைகளை கையால் நீக்க வேண்டும். 15வது நாள் முதல் நன்கு விரிந்த இளம் தோகையுடன் 10 இடங்களில் இலை வண்ண அட்டையில் உள்ள நிறங் களுடன் ஒப்பிட்டு சராசரி நிற எண்ணை குறிப்பிட்டு அதற்கு ஏற்ப தழைச்சத்து இட வேண்டும். திரவ உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியாவை இலை வழியாக தெளிக்கலாம். இவ்வாறு நெற்பயிருக்கு பரிந்துரைக்கப்படும் தொழில்நுட்பங்கள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை பின்பற்றினால் சாதாரண நெல் நடவில் கிடைக்கும் மகசூலை விட திருந்திய நெல் சாகுபடி முறையில் 30 சதவீதம் வரை கூடுதல் மகசூல் பெறலாம்.

## கோமாரி தடுப்பூசி முகாம்

வேதாரண்யம், : வேதாரண்யம் தாலுகா கடினல்வயல் ஊராட்சியில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. முகாமில் 156 கால்நடைகளுக்கும், 135 கோழிகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டது. கால்நடை உதவி மருத்துவர் மீனாட்சி சுந்தரம், கால்நடை ஆய்வாளர்கள் பழனியம்மாள், ரோஸ்லின், சத்யபாமா, கால்நடை உதவியாளர் பன்னீர்செல்வம், ஊராட்சி தலைவர் மலர்விழி தமிழழகன், துணை தலைவர் நாகலெட்சுமி, பாலசுப்பிரமணியன் மற்றும் ஊராட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கோமாரி தடுப்பூசி கட்டாயம் போட வேண்டும் கால்நடைகளுக்கு. நாகர்கோவில்: குருந்தன்கோடு கால்நடை மருந்தக உதவி மருத்துவர் முருகேசன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: கோமாரி எனப்படும் நோய், கால்நடைகளின் கால் மற்றும் வாய்பகுதிகளில் ஏற்படும் நோய். குறிப்பாக கறவை மாடுகளைக் தாக்கிப் பெருத்த பொருளாதார சேதத்தை ஏற்படுத்தும். இந்நோய் ஏற்படாமல் தடுக்க ஆண்டுக்கு இருமுறை தடுப்பூசி போட வேண்டும் என கால்நடை பரமாரிப்பு துறையினரால் வலியுறுத்தப்பட்டு தடுப்பூசிப் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் சில கால்நடை வளர்ப்போர் இந்நோய் தாக்கத்தின் பின்விளைவுகளை அறிந்தும் தடுப்பூசியினைப் போடாமல் அலட்சியப்படுத்துகின்றனர். இதனால் பொருளாதார இழப்பு ஏற்படுகிறது. ஆகவே ஆண்டுக்கு இருமுறை போடப்படும் கோமாரி நோய்க்கெகிரான தடுப்பூசியினை அலட்சியப்படுத்தாமல் கால்நடைகளுக்கு போடவேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியிலும் பயிர்க்கடன்

ரோடு, : தமிழக விவசாயிகள் சங்கம் (கே.சி.ரத்தினசாமி பிரிவு) சார்பில் மாதாந்திர கூட்டம் ஈரோட்டில் சங்க அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் குமாரசாமி தலைமை வகித்தார். மாவட்ட பொருளாளர் லட்சுமணன், வேலுசாமி, லோகுசாமி, பெரியசாமி முன்னிலை வகித்தனர். மாநில தலைவர் ரத்தினசாமி சிறப்புரையாற்றினார். நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு: தமிழகத்தில் உள்ள அனைத்து அணைக்கட்டுகள், குளம், ஏரி, குட்டைகளை தூர்வாரியும், நீர்வழிப்பாதைகளிலும், பாசன கால்வாய்களிலும் ஆக்ரமிப்புகளை அகற்றி தூர்வாரி மேம்படுத்தி நீர்பங்கீட்டை முறைப்படுத்தவும், பாசனத்திறனை மேம்படுத்தி உரிய காலத்தில் வழங்க உறுதியளிக்கும் வகையில் போர்க்கால

அடிப்படையில் நடவடிக்கை எடுக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். விநாயகர் சதுர்த்தியையொட்டி, கீழ்பவானி வாய்க்காலில் சிலைகளை கரைக்க அனுமதிப்பதில்லை என ஈரோடு, திருப்பூர் மாவட்ட நிர்வாகங்கள் உறுதியளித் திருந்த நிலையில், அதை மீறி திட்டமிட்டு கீழ்பவானி வாய்க்காலில் கரைக்க அனுமதியளித்த மாவட்ட நிர்வாகத்துக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இனிவரும் காலங்களில் எந்தவொரு பாசன கால்வாய்களிலும் சிலைகளை கரைக்க அனுமதி வழங்க கூடாது என்பதை வலியுறுத்தி சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடர முடிவு செய்யப்பட்டது. கரும்பு கொள்முதல் விலையாக மத்திய அரசு அறிவித்துள்ள விலையுடன் மாநில அரசு அறிவித்துள்ள ஊக்கத் தொகையையும் சேர்த்து ரூ.2650 என்ற அடிப்படையில் விவசாயிகளுக்கு விலை வழங்க தனியார் சர்க்கரை ஆலைகள் மறுக்கிறது. இதனை வழங்கவும், கரும்பு விவசாயிகளுக்கு நிலுவை தொகை வழங்காமல் உள்ள தனியார் ஆலைகளிடம் இருந்து தொகையை பெற்று தரவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேசிய கோமாரி நோய் தடுப்புத்திட்டத்தன் படி செப்டம்பர் 1ம் தேதி முதல் கோமாரி தடுப்பூசி போடும் திட்டத்தை செயல்படுத்தி வரும் கால்நடை பராமரிப்புத்துறைக்கு நன்றியை தெரிவிப்பதுடன், விவசாயிகளின் கால்நடை பண்ணைகளிலேயே தடுப்பூசி போட உதவி செய்ய வேண்டும். பால் உற்பத்தி செலவு மற்றும் தீவன விலை உயர்வு காரணமாக பசும்பாலுக்கு லிட்டருக்கு ரூ.30ம், எருமைப்பாலுக்கு ரூ.40ம் விலை உயர்வு வழங்க வேண்டும். ஊட்டி- ஈரோடு மாநில நெடுஞ்சாலை எண் எஸ்எச்-15 பகுதியில் விரிவாக்கம் செய்ய பல இடங்களில் நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான இடங்கள் போதுமானதாகவும், வளைவுகள் இன்றி நேராகவும், மேடுபள்ளம் இன்றியும் இருக்கும் போது பாசன விவசாய விளைநிலங்களை கையகப்படுத்தாமல் ஏற்கனவே உள்ள சாலையையே விரிவுப்படுத்த மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியிலும் பயிர்கடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**<u>23டன் சின்னவெங்காயம் ரூ2.15 லட்சத்துக்கு ஏலம்</u>**

பெரம்பலூர்,: செட்டிகுளம் வெங்காய வணிக வளாகத்தில் 23 மெ.டன் வெங்காயம் ரூ2.15 லட்சத்திற்கு ஏலம் எடுக்கப்பட்டது என கலெக்டர் தரேஸ்அகமது தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுகா, செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் 2ம்தேதியன்று திறந்தமுறை ஏலம் நடைபெற்றது. இதில் இருர், ஆலத்தூர், லாடபு ரம், நக்கசேலம், சத்திரமனை, செட்டிக்குளம், நாட்டார்மங்கலம், களரம் பட்டி, பாடாலூர் ஆகிய கிராமங் களைச் சேர்ந்த 51 விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தினை திறந்தமுறை ஏலத்திற்கு கொண்டுவந்து விற்பனை செய்தனர். இதில் செட்டிகுளம், திண்டுக்கல், கோபிச்செட்டிப்பாளையம், மற்றும் சின்னசேலம் ஆகிய பகுதிகளிலிருந்து 15 வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர். விவசாயிகள் கொண்டு வந்திருந்த 341 மூட்டை, அதாவது 22,575 கிலோ சின்னவெங்காயத்தை வியாபாரிகள் ஏலத்தில் எடுத்தனர். அன்றைய ஏலத்தில் பழைய பட்டறை வெங்காயம் அதிகப்பட்சமாக ரூ.11க்கும், புதிய வெங்காயம் கிலோ ஒன்றுக்கு அதிகப் பட்ச மாக ரூ.24க்கும் சராசரியாக கிலோ ஒன்றுக்கு ரூ.9க்கும் விலை கிடைத் தது. இதன் மூலம் ரூ.2,15,132 க்கு சின்னவெங்காயம் விற்பனை நடைபெற்றது. செட்டிகுளம் வெங்காய வணிகவளாகத்தில் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமை களில் திறந்தமுறை ஏலம் நடத்தப்படுகிறது. விவசாயிகள் தங்களது வெங்காய விளை பொ ருளை இன்று (4ம்தேதி)வியாழக்கிழமை நடத்தப்படும் ஏல விற்பனைக்கு கொண்டு வந்து விற்பனை செய்து பயன்பெற வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இன்றைய வேளாண் செய்திகள்

## தொடர் மழை காரணமாக பரம்பிக்குளம் அணை நிரம்பியதால் 3 மதகுகள் வழியாக தண்ணீர் திறப்பு



தொடர் மழை காரணமாக பரம்பிக்குளம் அணை நிரம்பியதால் 3 மதகுகள் வழியாக தண்ணீர் திறக்கப்பட்டது. பரம்பிக்குளம் அணை பரம்பிக்குளம்– ஆழியாறு திட்டத்தின் (பி.ஏ.பி.) முக்கிய அணையாக பரம்பிக்குளம் அணை விளங்கி வருகிறது. கேரள மாநிலத்தில் அமைந்துள்ள பரம்பிக்குளம் அணை தமிழக பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. சோலையார் அணையில் இருந்து பரம்பிக்குளம் அணைக்கு தண்ணீர் வருகிறது. மேலும் அணையின் நீர் பிடிப்பு பகுதிகளில் இருந்தும் தண்ணீர் வருகிறது. இந்த நிலையில் வால்பாறை மற்றும் பரம்பிக்குளம் பகுதியில் கடந்த 2 மாதங்களாக தென்மேற்கு பருவமழை தீவிரமாகபெய்துவருகிறது. நிரம்பியது எனவே மழையின் காரணமாக கடந்த மாதம் சோலையார் அணை நிரம்பியது. இதைத்தொடர்ந்து பரம்பிக்குளம்

அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. 72 அடி கொள்ளளவு கொண்ட பரம்பிக்குளம் அணை படிப்படியாக நிரம்ப தொடங்கியது. இதனால் நேற்று முன்தினம் பரம்பிக்குளம் அணையின் நீர் மட்டம் 69.90 அடியாக இருந்தது. இதனிடையே நேற்று முன்தினம் இரவு சோலையார் அணையில் இருந்து பரம்பிக்குளம் அணைக்கு தண்ணீர் அதிகமாக வந்தது. இதனால் நேற்று காலை பரம்பிக்குளம் அணை தனது முழு கொள்ளளவான 72 அடியை எட்டியது. இதைத்தொடர்ந்து அணையின் பாதுகாப்பு கருதி 3 மதகுகள் வழியாக நேற்று கேரளாவுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. 4 ஆயிரம் கன அடி இது குறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியதாவது:– பரம்பிக்குளம் அணைக்கு தண்ணீர் வரத்து தொடர்ந்து அதிகமாக உள்ளது. மேலும் இந்த அணைக்கு சோலையார் அணையில் இருந்து வினாடிக்கு 3,500 கன அடியும், நீர் பிடிப்பு பகுதியில் இருந்து 500 கன அடியும் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணை நிரம்பியதால் பாதுகாப்பு கருதி 3 மதகுகள் வழியாக நேற்று காலை 8.15 மணிக்கு தண்ணீர் கேரளாவுக்கு திறந்து விடப்பட்டது. வினாடிக்கு 4 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**<u>குமரி மாவட்டத்தில் தொடர்மழை: அணைகளில் தினமும் நீர்மட்டம் உயர்வு திருவட்டார் பகுதியில் 7 செ.மீ. பதிவு</u>**



குமரி மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணைகளில் நீர்மட்டம் தினமும் உயர்ந்து வருகிறது. திருவட்டார் பகுதியில் நேற்று காலை நிலவரப்படி 7 செ.மீ.மழை பதிவாகியிருந்தது. குளுமை நிலை குமரி மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக தினமும் சாரல்மழை பெய்து வருகிறது. எப்போது மழை பெய்யும் என்றே

சொல்ல முடியாத அளவுக்கு திடீர் திடீரென பெய்து விடுகிறது. இதனால் வீட்டை விட்டு வெளியே கிளம்பினால் கட்டாயம் குடை எடுத்துச் செல்ல வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்று காலையில் வானம் இருண்டு, சாரல்மழை பெய்தது. இதனால் பள்ளி, கல்லூரிக்கு புறப்பட்ட மாணவ–மாணவிகள் தங்களுக்கு விடுமுறை கிடைக்காதா? என்று எதிர்பார்த்தனர். ஆனால் விடுமுறை அறிவிக்கப்படவில்லை. இதனால் குடை, ரெயின்கோட் போன்றவற்றுடன் பள்ளி, கல்லூரிகளுக்கு புறப்பட்டு விட்டனர். மழை, விட்டு விட்டு பெய்து கொண்டே இருந்தது. மாவட்டம் முழுவதும் இதே நிலையை காண முடிந்தது. நேற்று வெயில் அடிக்கவே இல்லை. 'குளு குளு' என்று குளுமைநிலை தென்பட்டது. திருவட்டாரில் அதிக மழை மழை காரணமாக குளங்கள் நிரம்பி வருகின்றன. அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. குமரி மாவட்டம் முழுவதும், நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:– பேச்சிப்பாறை–20.6, பெருஞ்சாணி–23.8, சிற்றார் (1) – 14.6, சிற்றார் (2) – 19.2, மாம்பழத்துறையாறு–31, இரணியல்–9.4, ஆனைக்கிடங்கு–2, குளச்சல்–26, குருந்தன்கோடு–13, அடையாமடை–41, கோழிப்போர்விளை–15.5, திருவட்டார்–73.2, முள்ளங்கினாவிளை–23, புத்தன்அணை–22.6, திற்பரப்பு–19, நாகர்கோவில்–14, பூதப்பாண்டி–10, சுருளோடு–16.2, கன்னிமார்–15.2, ஆரல்வாய்மொழி–1.6, பாலமோர்–42.4, மயிலாடி–2.8, முக்கடல்–30. மாவட்டத்தில் அதிகபட்சமாக திருவட்டார் பகுதியில் 73.2 மி.மீ. அதாவது 7 செ.மீ. மழை பெய்துள்ளது. நீர்மட்டம் உயர்வு மழை காரணமாக, அணைகளுக்கு தொடர்ந்து தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. பேச்சிப்பாறை அணைக்கு நேற்று வினாடிக்கு 1080 கனஅடியும், பெருஞ்சாணிக்கு 1592 அடியும், சிற்றார்–1 அணைக்கு 141 அடியும், சிற்றார்–2 அணைக்கு 194 அடியும் தண்ணீர் வந்தது. இதன் காரணமாக அணைகளின் நீர்மட்டம் தினமும் உயர்ந்து வருகிறது. பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 25.30 அடியில் இருந்து 26.50 அடியாக நேற்று உயர்ந்தது. பெருஞ்சாணி

அணை நீர்மட்டம் 66.90 அடியில் இருந்து நேற்று 68.60 அடியாக உயர்ந்தது. முக்கடல் அணையில் நீர்மட்டம் 16.50 அடியாக உயர்ந்தது. மாம்பழத்துறையாறு அணை தொடர்ந்து நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது. அணைக்கு வரும் 30 கனஅடி தண்ணீர் அப்படியே உபரிநீர் மடையில் வெளியேற்றப்படுகிறது.

**பெரம்பலூர் மாவட்டத்தில் 10 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி கலெக்டர் தகவல்**



பெரம்பலூர் மாவட் டத்தில் 10 ஆயிரம் கால் நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது என்று கலெக்டர் தரேஸ் அஹமது தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளிட் டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:– 13 சுற்று தடுப்பூசி பணிபெரம்பலூர் மாவட்டத்தில் கால்நடைகளை கோமாரி நோயிலிருந்து பாது காப்பதற் காக கால்நடை பரா மரிப்புத் துறையின் மூலமாக ஆண்டுக்கு இருமுறை வீதம் ஒவ்வொரு கிராமங்களில் உள்ள அனைத்து கால்நடை களுக் கும் 13 சுற்று தடுப்பூசி கால்நடை களுக்கு போடப்பட வேண்டும். இதன் தொடர்ச்சி யாக பெரம்பலூர் மாவட்டத்தில் 6 சுற்று தடுப்பூசிப் பணி முடிக்கப்பட்டு 7வது சுற்றில் 1 லட்சத்து 25 ஆயிரத்து 600 கால்நடை களுக்கு தடுப்பூசிப் போட இலக்கு நிர்ணயிக்கப் பட்டு கடந்த 1–ந் தேதி முதல் 21–ந் தேதி முடிய பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 121 கிராம ஊராட்சி மற்றும் 4 பேரூராட்சியை சேர்ந்த அனைத்து குக்கிராமங்களிலும் இத்தடுப்பூசிப் பணி மேற் கொள்ள நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது. அதிகாரி தொடங்கி வைத்தார் பெரம்பலூர் மாவட்டத்தில் குரும்பலூர் பேரூராட்சியை சேர்ந்த பாளையம் கிராமத்தில் நடைபெற்ற தடுப்பூசி முகாமை பெரம்பலூர் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர்

சந்திர சேகரன் தொடங்கி வைத்தார். இம்முகாமில் பெரம்பலூர் கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தித் திட்ட துணை இயக்குனர் தங்கராசு, ப.மோகன், குரும்பலூர் கால்நடை மருந்தக உதவி மருத்துவர் சு.மூக்கன், கால்நடை பராமரிப்பு உதவி யாளர் பெரியசாமி ஆகியோர் பாளையம் கிராமத்தில் 450 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணியில் ஈடுபட்டனர். 2 நாட்களில் கடந்த 1–ந் தேதி மற்றும் 2–ந் தேதிகளில் பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம் செங் குணம், பொம்மனபாடி, வேப் பந்தட்டை ஊராட்சி ஒன் றியம் அனுக்கூர், அ.மேட்டூர், கிருஷ்ணாபுரம், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம் நக்கசேலம் கிராமத்திலும், வேப்பூர் ஊராட்சி ஒன்றியம் வேப்பூர் மற்றும் பெரிய வெண்மணி ஆகிய கிராமங்களிலும், வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிருஷ்ணாபுரம், அரும்பாவூர், அனுக்கூர், குடிக்காடு, பிரம்மதேசம் வடக்கு ஆகிய பகுதிகளிலும், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற் குட்பட்ட நக்கசேலம், மதுர குடிகாடு, ஆதனூர் ஆகிய பகுதிகளிலும், வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட் பட்ட வேப்பூர், ஓலைப் பாடி, பெரியம்மாபாளையம் ஆகிய பகுதிகளிலும், பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்திற் குட்பட்ட செங்குணம், பொம்மனப்பாடி ஆகிய பகுதிகளில் உள்ள 10 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி பணி மேற்கொள்ளப் பட்டது. மேலும் வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்திற் குட்பட்ட வெண்பாவூர், தழு தாழை, பிரம்மதேசம் ஆகிய பகுதிகளிலும், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத் திற்குப் பட்ட புது அம்மா பாளையம், ஈச்சம்பட்டி, இலந்தங்குழி, சீராநத்தம், ஆகியபகுதி களிலும், , வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஒக ளூர், ஓலைப் பாடி, சின்ன வெண்மணி, கொத்தவாசல் ஆகிய பகுதிகளிலும், பெரம்ப லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட் பட்ட அருமடல், குரும்பலூர், குரும்பலூர் காலனி, சத்திர மனை, சத்திரமனை செல்லியம் மன் கோவில் உள்ளிட்ட பகுதிகளிலும் கால் நடை களுக்கு தடுப்பூசி பணி மேற் கொள்ளப்பட உள்ளது. வேண்டுகோள் ஆதலால் கால்நடைகளை வளர்ப்போர் தங்கள் கிரா மத்திற்கு தடுப்பூசி குழுவினர் வரும் பொழுது 4 மாத கன்று முதல் சினை, மற்றும் கறவை பசு உள்ளிட்ட தங்களின் அனைத்து மாடு களுக்கும் தவறாமல் கால் வாய் நோய் தடுப்பூசி போட் டுக்கொண்டு பயன்பெற வேண்டும். மேற்கண்ட தகவலை பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் தரேஸ் அஹமது அதில் தெரிவித்துள்ளார்.

இன்றைய வேளாண் செய்திகள்

## சென்னையில் இயற்கை விளைபொருள் கண்காட்சி

சென்னையில் முதல் முறையாக இயற்கை விளை பொருள் கண்காட்சி நடைபெற உள்ளது. பெசன்ட் நகரில் உள்ள ஸ்பேஸ் அரங்கில் இம்மாதம் 7-ம் தேதி இக்கண்காட்சி நடைபெற உள்ளது. ஆரோக்கிய வாழ்க்கை முறை, வீணாகும் நீரை தோட்டங்களுக்கு சுழற்சி முறையில் பயன்படுத்துவது, குடிநீர் சுத்திகரிப்பு, சுற்றுப்புறம் மாசுபடுதலைத் தடுப்பது, மழை நீர் சேகரிப்பு, ஆடைகளில் இயற்கை சாயம் பயன்படுத்துவது உள்ளிட்ட பல இயற்கை சார்ந்த விஷயங்கள் இக்கண்காட்சியில் விளக்கப்படும். காலை 7 மணிக்குத் தொடங்கி இரவு 7 மணி வரை நடைபெற உள்ளது. இயற்கை விளை பொருள்களில் தயாரிக்கப்படும் எளிய வகை உணவுகள் இக்கண்காட்சியில் இடம்பெறும். பெங்களூரில் 7 முறை வெற்றிகரமாக நடத்தப்பட்ட இக்கண்காட்சி இப்போது முதல் முறையாக சென்னையில் நடத்தப்பட உள்ளது. வணிக நோக்கமின்றி ஆரோக்கியமாக வாழ வழிவகை செய்வதே இதன் நோக்கமாகும். உரமின்றி இயற்கை வேளாண் முறையில் தயாரிக்கப்படும் பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனங்களும் தங்களது தயாரிப்புகளை காட்சிப்படுத்த உள்ளன.

## தென்னை, பனை மரங்களில் ஏற உதவும் கருவி



தென்னை, பனை உள்ளிட்ட உயரமான மரங்களில் காய்களைப் பறிப்பது என்பது விவசாயிகளுக்கு பெரும் சவாலாக உள்ளது. மரம் ஏறி காய் பறிப்பதற்கான தொழிலாளர்கள் சரியான நேரத்தில் கிடைக்காததே இதற்குக் காரணம். இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண தென்னை, பனை, பாக்கு உள்பட கிளையில்லாத அனைத்து உயரமான மரங்களிலும் ஏறுவதற்கான கருவி தற்போது சந்தைகளில் விலைக்குக் கிடைக்கிறது. கோவை மாவட்டம் நரசிம்மநாயக்கன் பாளையத்தைச் சேர்ந்த டி.என். வெங்கட் (என்கிற) ரெங்கநாதன் வடிவமைத்த கருவி உயரமான மரங்களில் ஏறுவதை மிகவும் எளிதாக்கியுள்ளது. இந்தக் கருவியை வடிவமைத்த தனது அனுபவம் குறித்து வெங்கட் கூறியதாவது: 25 ஆண்டுகள் ஜவுளி ஆலையில் நான் தொழிலாளியாகப் பணியாற்றினேன். 1999-ம் ஆண்டு ஆலையை மூடி விட்டார்கள். அப்போதுதான் தென்னை மரம் ஏறும் கருவியை வடிவமைப் பதற்கான எண்ணம் என்னிடம் ஏற்பட்டது.தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களில் தேங்காயின் தேவை அதிகமாக இருக்கும். அப்போது தென்னந் தோப்புகளை வைத்திருப்பவர்கள் காய்களை வெட்டி விற்பனை செய்தால் நல்ல லாபம் கிடைக்கும். ஆனால் மரம் ஏறி காய் வெட்ட ஆள் கிடைக்காமல் பல விவசாயிகள் அல்லல்படுவதை நான் பார்த்திருக்கிறேன். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற நோக்கில் கருவியை வடிவமைக்கத் தொடங்கினேன். என் சித்தப்பா குருசாமி வைத்திருந்த பட்டறை என்ஜினீயரிங் கண்ணோட்டத்தோடு கருவியை வடிவமைப்பதற்கான பல விஷயங்களை எனக்கு கற்றுக் கொடுத்தது. 2005-ம் ஆண்டில் நான் உருவாக்கியதுதான் தென்னை மரம் ஏறும் கருவி. தென்னை மரத்துக்கு மட்டுமின்றி, பனை மரம் ஏறும் கருவி, பாக்கு மரம் ஏறும் கருவி ஆகியவற்றையும் உருவாக்கினேன். எனது கண்டுபிடிப்பு பற்றி அறிந்த புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்கான தேசிய நிறுவனம் (National Innovation Foundation), மதுரை சேவா மற்றும் நபார்டு போன்ற நிறுவனங்கள் எனது கருவியை பிரபலப்படுத்த பல உதவிகளை செய்தன. NIF நிறுவனத்தின் உதவியால் எனது கண்டுபிடிப்புக்கு நான் காப்புரிமை பெற்றேன். பாரம்பரிய அறிவைப் பயன்ப டுத்தி அரிய கண்டு பிடிப்புகளை நிகழ்த்துவோருக்காக மத்திய அரசின் தேசிய அறிவியல் தொழில்நுட்பத் துறை வழங்கும் தேசிய விருது 2012-ம் ஆண்டு எனக்கு வழங்கப்பட்டது. எனது கண்டுபிடிப்புக்காக மேலும் பல விருதுகள் கிடைத்துள்ளன. குஜராத் மாநில அரசு எனது கண்டுபிடிப்பை பெரிதும் ஊக்கப்படுத்தியுள்ளது. அம்மாநிலத்தில் உள்ள விவசாயப் பல்கலைக்கழகம் என்னிடமிருந்து 150 கருவிகளை விலைக்கு வாங்கியது. தற்போது இந்தியாவின் பல மாநிலங்களில் நான் வடிவமைத்த கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும்

இலங்கை, ஆஸ்திரேலியா, மாலத்தீவு, மொரீசியஸ் உள்பட உலகின் பல நாடுகளில் எனது கருவி பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. தென்னை, பனை மற்றும் பாக்கு மரங்களில் ஏற தனித்தனி கருவிகளை வடிவமைத்த நான், ஒரே கருவியின் மூலம் கிளை கள் இல்லாத அனைத்து வகை உயரமான மரங்களிலும் ஏறு வதற்கான புதிய கருவியை தற்போது வடிவமைத்துள்ளேன். பெண்கள், சிறுவர்கள் என எல்லோரும் இந்தக் கருவியைப் பயன்படுத்தி பாதுகாப்பாக மரத்தின் உச்சிக்கு சென்று காய்களைப் பறிக்க முடியும். 60 அடி உயரமுள்ள மரத்தில் 5 நிமிட நேரத்துக்குள் ஏறி, இறங்கலாம்" என்றார் வெங்கட். எல்லா வகை உயரமான மரங்களிலும் ஏறுவதற்கு ஏற்ற புதிய கருவியை வெங்கட் விற்பனை செய்கிறார். மேலும் விவரங்களுக்கு 99442 84440 என்ற செல்போன் எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

## இலைகள் மூலம் நாற்று உற்பத்தி



நாற்று உற்பத்தியில் இலைகள் மூலம் செடி வளர்ப்பு எனும் புதிய நடைமுறையைக் கண்டுபிடித்து அதில் வெற்றியும் கண்டுள்ளார் மேட்டுப்பாளையத்தைச் சேர்ந்த விவசாயி ராஜரத்தினம். கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வெளிப் பாளையம் சாலை பகுதியைச் சேர்ந்தவர் ராஜரத்தினம். 4 ஏக்கரில் நர்சரி தோட்டம் அமைத்து நாற்று உற்பத்தியை மேற்கொண்டு வருகிறார். நாற்று உற்பத்தியில் இலைகள் மூலம் செடி வளர்ப்பு எனும் நடைமுறையைக் கண்டறிந்துள்ளார். இந்த தொழில்நுட்பம் குறித்து அவர் கூறியதாவது: "கடந்த 1998-ம் ஆண்டில் இருந்து நாற்று உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறேன். பூ வகைகளில் மல்லி, முல்லை, ஜாதி ரோஜா, அரளி, காக்கடா ஆகியவையும், பழ நாற்றில் ஈடன் எலுமிச்சை (குளோன் நாற்று), மாதுளை, பப்பாளி ரகம் ஆகியவையும், மர வகைகளில் மலை வேம்பு,

சந்தனம், செஞ்சந்தனம், பெருமரம் போன்றவற்றையும் உற்பத்தி செய்து வருகிறேன். நாற்று உற்பத்தியில் விதைகள் மூலம் நாற்று உற்பத்தி, கட்டிங் முறை, விண் பதியம், மண் பதியம், ஒட்டுக் கட்டுதல், மொட்டுக் கட்டுதல், பட்டிங், கிராஃபிங், திசு வளர்ப்பு போன்ற முறைகள்தான் இருந்து வருகிறது. இலைகள் மூலம் நாற்று உற்பத்தி என்பது புதிய முறையாகும். மண் நிரப்பிய பாலிதீன் பைகளை பனிக் கூடாரத்தினுள் அடுக்கி வைக்க வேண்டும். அதன் மீது தண்ணீர் விட்டு நன்றாக ஈரம் செய்ய வேண்டும். அடுத்து விருப்பமான செடிகளில் இருந்து இலைகளை பறிக்க வேண்டும். உதாரணத்துக்கு கொய்யா இலையை எடுத்துக் கொண்டால், அந்த இலையை பூஞ்சானைக் கொல்ல பயன்படும் திரவத்தினுள் போட்டு எடுக்க வேண்டும். அடுத்து வேர் தூண்டும் பவுடரை இலைக் காம்பில் மட்டும் தொட்டு, அந்த இலையை பாக்கெட் மண்ணில் நட வேண்டும். கூடாரத் தின் வெப்ப நிலை மற்றும் ஈரப்பதம் ஆகியவற்றை சரியான அளவில் பராமரிக்க வேண்டும். முதல் 5 வாரத்தில் காம்பு பகுதியில் இருந்து வேர் வரும். பின்னர், வேர் முடிச்சில் இருந்து புதுச்செடி உருவாகிவிடும். இதையடுத்து, பாக்கெட்டில் இருந்து செடியை வெளியே எடுத்து நடலாம். இந்த முறையில், விவசாயிகள் அதிகம் பயிரிடும் கொய்யா, குண்டு மல்லி, திருச்சி மாவட்டத்தில் அதிகம் பயிரிடக் கூடிய இட்லி பூ, காக்கடா, வெற்றிலை ஆகிய பயிர்களை பயிரிட்டு வெற்றி அடைந் துள்ளேன். கட்டிங் மூலம் வராத தாவர வகைகளிலும் இந்த புதிய முறையின் மூலம் நாற்று உற்பத்தி செய்ய முயற்சித்து வருகிறேன். தற்போது, இந்த புதிய முறை மூலம் கண்டுபிடிக்கப்பட்ட நாற்றுகளை விவசாயிகளுக்கு சோதனை அடிப்படை யில் இலவசமாகக் கொடுத்து வருகிறேன். விதை வளர்ப்பு முறையில் விளைச்சல் ஒரே மாதிரி இருக்காது. திசு வளர்ப்பு முறையில் ஒரு செடிக்கு ரூ. 12-க்கு குறையாமல் நாற்று உருவாக்க முடியாது. இதற்கெல்லாம் மாற்றாக இருப்பதுதான் இலைகள் மூலம் செடிகள் உற்பத்தி முறையாகும்” என்கிறார் ராஜரத்தினம். தொடர்புக்கு: 94860 94670